மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெயர் வைப்பது குறித்த கேள்வியினைக் குறித்து தனியாக எழுதினால், அதுபற்றி பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

*168—(*வினா எண். 446)* **திரு. மா. சுந்தரதாஸ் :** மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சமீப ஆண்டுகளில் மத்திய அரசிடமிருந்து மானியமும் கடனும் பெற்று வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : (அ) தலைவர் அவர்களே, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மத்திய அரசிடமிருந்து மானியம் மற்றும் கடன் பெறவில்லை. மாநில அரசிடமிருந்து மானியம் மற்றும் கடன் பெறப்பட்டு இருக்கின்றது. பெருநகர் வளர்ச்சிக் குழுமம் நேரிடையாக கையாளும் எந்தத் திட்டமும் மத்தியஅரசினால் வகுக்கப்பட்டதல்ல.

(ஆ) வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

3. தகவல் கோரல்

(அ) சென்னை நகரில் குடி நீர் வழங்குவதில் உள்ள குறைபாடுகள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரிலே கடுமையான குடி தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டு இருக்கிறது அதனுடைய பிரதிபலிப்பாக இன்று நம்முடைய சட்டமன்ற வளாகத்திலே இருக்கின்ற குழாய்களிலே கூட தண்ணீர் வரவில்லை. இந்தக் குடி தண்ணீரை சென்னை நகரத்திலே லாரிகள் மூலமாக மெட்ரோ வாட்டர் விநியோகம் செய்து வருகிறது. அப்படி வழங்கப்படுகிற இடங்களில் குடம் ஒன்றுக்கு 10 காசு என்று சிலர் வசூலித்து வருகிறார்கள்.